

மதுரை திருமலை நாயக்கர் மகால் முன்பாக மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் 443ஆம் ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருஉருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், கோட்டாட்சியர் சங்கீதா, மாமன்ற உறுப்பினர் பெ.சசிகுமார், தி.மு.க. சிறுபான்மை நலப்பிரிவு அமைப்பாளர் மீராஜான் உள்ளிட திரளானோர் பங்கேற்றனர்.



மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களின் 443ஆவது பிறந்த நாளையொட்டி, மதுரை திருமலை நாயக்கர் மகால் வளாகத்தில் உள்ள அவரது திருஉருவச் சிலைக்கு அரசு சார்பில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் அரசு அதிகாரிகள், தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

### 50 ஆண்டுகளாக பல சாதனைகளைப் படைத்து வருகிறார்!

# லியோனியின் நகைச்சுவை சிரிக்க மட்டுமல்ல சிந்திக்கவும் வைக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – லியோனியின் பொன்விழா நிகழ்ச்சியில் வாழ்த்து!

**சென்னை, பிப்.2 – சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “லியோனி ஆகிய நான்” 50–ம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களை வாழ்த்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:–**

இன்றைக்கு காரைக்குடியில் நடைபெறுகின்ற அரசு விழாவில் பங்கேற்பதற்காக சிவகங்கை மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். இதற்காக, நேற்று சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்த போது, நம்முடைய திண்டுக்கல் லியோனி அவர்கள் என்னை சந்தித்து, இன்று நடைபெறுகின்ற பொன்விழா என்று சொல்லி அழைத்தார். என்னை லேட்டாக அழைத்த காரணத்தினால், நேரில் வரமுடியவில்லை என்றாலும், வீடியோ மூலமாக நிச்சயம் வாழ்த்த வேண்டும் என்று இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறேன்.

**50 ஆண்டுகளாக மக்களை மகிழ்விக்கும் லியோனி!**

பட்டிமன்ற உலகத்தை பொறுத்தவரைக்கும், நம்முடைய லியோனி அவர்கள் தான் கதாநாயகன்! தன்னுடைய கருத்தாழமிக்க சிந்தனைகளால், நயமிக்க நகைச்சுவை பேச்சால், தமிழ்நாட்டு மக்களை 50 ஆண்டுகளாக மகிழ்வித்துக் கொண்டிருக்கக்கூடிய லியோனி அவர்களை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

பேச்சுலக மேடைகளில் இன்னும் பல்லாண்டு காலம் அவர் கோலோச்ச வேண்டும் என்று முதலமைச்சராக மட்டுமல்ல! அவருடைய ரசிகனாக நான் வாழ்த்துகிறேன்!

சிரிப்பொலி – பேச்சொலி – இசையொலி – மேடையொளி இதுதான் திண்டுக்கல் லியோனி! எப்படிப்பட்ட கவலையில் இருந்தாலும், மன அழுத்தத்தில் இருந்தாலும், லியோனி அவர்களுடைய பேச்சைக் கேட்டால், மகிழ்ச்சியும், புன்னகையும் தன்னால் வரும்! அரசியல் மேடைகள், பட்டிமன்ற மேடைகள் என்று தன்னுடைய வெற்றிக்கொடியை பறக்கவிட்டிருக்கின்ற அவருடைய சாதனை சாதாரணமானது அல்ல! ஐம்பதாண்டுகள் மேடைகளில் நிலைத்து நிற்கின்ற சாதனையை எல்லோராலும் செய்துவிட முடியாது! நிறைய பேர் OUT DATE ஆகிவிடுவார்கள். ஆனால், நம்முடைய லியோனி அவர்கள் UPDATE ஆகி நிலைத்து நிற்கிறார்.

1976-ல் திண்டுக்கல் G.T.N. கலைக் கல்லூரியில் படிக்கும்போது, தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வைத்தியலிங்கன் தலைமையில் அரங்கேறிய அவருடைய பட்டிமன்ற மேடைப் பயணம் – தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

**பரபரப்பாக விற்கப்பட்ட பட்டிமன்ற கேசட்டுகள்!**

நகைச்சுவை மட்டுமல்ல, பாட்டு, பல குரல் என்று மேடையையே கலக்குவார்! நம்முடைய லியோனி அவர்களின் பட்டிமன்றங்களை பார்க்க எவ்வளவு மக்கள் கூடுவார்களோ, அதைவிட அதிகமாக அவருடைய பட்டிமன்ற கேசட்டுகளை மக்கள் விரும்பி வாங்கினார்கள்.

பட்டுக்கோட்டையா? கண்ணதாசனா? பழைய பாடலா? புதிய பாடலா? என்று அவரின் ஜனரஞ்சகமான பட்டிமன்றங்கள் ஒலிக்காத வீடுகளும் இல்லை! கேட்காத மக்களும் இல்லை! கேசட் – சி.டி. கடந்து, இன்றைக்கும் யூடியூபில் லியோனியின் பட்டிமன்றங்களை எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! கேட்டுக் கொண்டிருக் கிறார்கள்! 5 ஆயிரத்துக்கும் அதிகமான மேடை நிகழ்வுகள், தொலைக் காட்சியில் இசைக்குழுவினரோடு இணைந்து பாட்டுமன்றம் – இசையமைப்பாளர்கள் – நாட்டுப்புற கலைஞர்கள்கூட இணைந்து உலகம் முழுவதும் நிகழ்ச்சிகள் என்று ஏராளமான சாதனைகள் படைத்திருக்கிறார். நம்முடைய லியோனி அவர்களின் சிறப்பு என்னவென்றால், அவருடைய நகைச்சுவை சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும் வைக்கும்! மறுபடி மறுபடியும் கேட்க தூண்டும்! இதுதான் லியோனி அவர்களுடைய தனித்தன்மை!

**கலைஞரின் ரசிகராக கழகத்தில் இணைந்தவர் லியோனி!**

இப்படி, பட்டிமன்ற மேடைகளில் கலக்கிக் கொண்டிருந்த லியோனி அவர்கள், தான் கலைஞரின் ரசிகர் என்று பெருமையோடு சொல்லி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்! இணைந்ததும், கலைஞர் தொலைக்காட்சியில் “நல்லாப் பேசுங்க... நல்லதையே பேசுங்க” என்ற பேச்சரங்க நிகழ்ச்சியை 300 வாரங்கள் நடத்தினார். 100 வாரங்கள் பேச்சுத் திரு விழாவை நடத்தினார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மூலம், நூற்றுக்கும் மேற்பட்ட பேச்சாளர்களை உருவாக்கினார். மக்களுக்கு அடையாளம் காட்டினார்!

அதுமட்டுமல்ல, பெருமையோடு சொல்கிறேன்... திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். கழக மேடைகளிலும், பட்டிமன்ற மேடைகளிலும், தொலைக்காட்சிகளிலும் கொடிகட்டிப் பறக்கின்ற நம்முடைய லியோனி அவர்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.


இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தினார்.

# கவிஞர் ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் – படத்திறப்பு!

## திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பங்கேற்பு!

*சென்னை, ஜன. 31*

கவிஞர் ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் நிகழ்ச்சியினைச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித் துறை வரும் பிப்ரவரி 3ஆம் தேதி மெரினா வளாசப் பவளவிழாக் கலையரங்கில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.



இந்த நிகழ்ச்சியில் திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணி அவர்கள் கலந்து கொண்டு கவிஞர் ஈரோடு தமிழன்பனின் உருவப் படத்தினைத் தை திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் நீதியரசர் அரி. பரந்தாமன் அவர்களும், மூத்த பேராசிரியர் இராம. குருநாதன் அவர்களும், திராவிடர் கழகப் பிரச் சாரச் செயலாளர் வழக் கறிஞர் அ. அருள்மொழி அவர்களும் பங்கேற்று உரை நிகழ்த்துகின்றனர்.

மேலும் தி. வேணுகோபால் அவர்களும் கவிஞரின் மகன் மருத்துவர் பாப்லோ நெருடா அவர்களும் கலந்துகொண்டு உரை யாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கவிதை நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

இதில் கவிஞர் தி. அமிர்தகணேசன், கவிஞர் கவிமுகில், கவிஞர் விழிகள் தி. நடராசன், கவிஞர் தமிழமுதன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சிக்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கள் தலைமை தாங்குகின்றார்.

வரவேற்புரையை முனைவர் வாணி அறிவாளன் அவர்களும் நன்றியுரையை முனைவர் வே. நிர்மலர் செல்வி அவர்களும் ஆற்ற வுள்ளனர்.

# சாத்தான்குளத்தில் பிப்ரவரி 5 அன்று மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

*சாத்தான்குளம், பிப். 2 -*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்புமிகு பரப்புரை கூட்டம்இம்மாதம்முழுவதும் நடத்திட வேண்டும் என்றுமுதலமைச்சர்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெருவாரியான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிமக்களுக்கானநலத் திட்டங்களை வழங்கி வருகிறது தி. மு.க அரசு. உற்பத்தி துறையில் முன்னேற்றம், மகளிருக்கான திட்டங்கள்நிறைவேற்றம், புதிய முதலீடுகளை ஈர்ப்பது, கல்வித் துறையில், மருத்துவத் துறையில் என அடிப்படையான துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வேலை வாய்பை வழங்கியுள்ளஅரசின்சாதனைகளைஎடுத்துரைக்கும் விதமாக05.02.2026அன்று மாலை6மணிக்குசாத்தான் குளம் சாமி சன்னதி தெருவில் மாபெரும் பொதுக் கூட்டம் நடை பெறவுள்ளது.

எனது தலைமையில் நடைபெறும்பொதுக்கூட்டத்தில் நட்சத்திர பேச்சாளர் மனோஜ் பாண்டியன் சண்முகையா எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் டாக்டர் C.சுரேஷ், தலைமைக் கழக பேச்சாளர் G. சரத்பாலா ஆகியோரும் கழக நிர்வாகிகளும் உரை யாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள்,மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மாவட் டப் பிரதிநிதிகள், அனைத்துஅணிகளின்ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கிளைக் கழகநிர்வாகிகள்,வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக செயல் வீரர்கள், பொதுமக்கள்திரளாகபங்கேற்க வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருச்செந்தூரில் பிப்ரவரி 3 அன்று மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

*திருச்செந்தூர், பிப். 2 -*

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணக் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலானதி.மு.கஅரசின் சாதனைகளைமக்களிடம் எடுத்துரைக்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் 234 சட்டமன்றதொகுதிகளிலும் சிறப்புமிகு பரப்புரை கூட்டம் இம்மாதம் முழுவதும் நடத்திடவேண்டும் என்று முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெருவாரியானதேர்தல் வாக்குறுதிகளைநிறைவேற்றிமக்களுக்கானநலத்திட்டங்களை வழங்கி வருகிறது தி.மு.கஅரசு. உற்பத்தி துறையில் முன்னே ற்றம், மகளிருக்கான திட்டங்கள் நிறை வேற்றம், புதிய முதலீடு களை ஈர்ப்பது, கல்வித் துறையில், மருத்துவத் துறையில் எனஅடிப்படையான துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வேலை வாய்பைவழங்கியுள்ளஅரசின் சாதனைகளை எடுத்துரைக்கும் விதமாக 03.02.2026 அன்று மாலை 6 மணிக்குதிருச்செந்தூர் எம்.எல்.ஏ அலுவலகம் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

எனதுதலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நட்சத்திரபேச்சாளர் மனோஜ் பாண்டியன் முன்னாள் எம்.எல்.ஏ. எம். சி. சண்முகையா எம். எல்.ஏ. தொகுதிபார்வையாளர் டாக்டர் சபி,தலைமைக் கழகபேச்சாளர் பு. சரத்பாலா ஆகியோரும் கழக நிர்வாகிகளும் உரை யாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் மாநில, மாவட்டநிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள்,நி ர்வாகிகள், மாவட்டஅணிஅமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகநிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழகசெயல் வீரர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்கவேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



தூத்துக்குடி மாவட்டம் வேப்பலோடை அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்கண்டேயன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கினார்.நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் சேகர் ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முனியசாமி, பள்ளி மேலாண்மை குழு தலைவர் உமாசாந்தா, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஆசிரியர் ஆசிரியைகள், கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாள் – அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

*கன்னியாகுமரி, பிப். 2 -*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி தந்த காவியத் தலைவர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி நாளை (03.02.2026 செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு எனது தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று வடசேரியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து



மரியாதை செலுத்தப்பட வுள்ளது.

ஆகவே கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.




விருதுநகரில் பிப் 7 ல் தென் மண்டல தி.மு.க.இளைஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பாக பேட்டை மேற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் பேட்டை துர்கா மஹாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி பேசினார்.இந்நிகழ்வில் இளைஞர் அணி நெல்லை தொகுதி பார்வையாளர் ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எபினேசர், நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன், மேற்கு பகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் சங்கர்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,பகுதி இளைஞரணி அமைப்பாளர் சாதிக் பாஷா மற்றும் பகுதி இளைஞரணி முகவர்கள் கலந்து கொண்டனர்.